**ஓய்வூதியச் சுற்றுநிருபம்: 01/2016**

எனது இலக்கம்: ஓய்வு/சுற்றுநிருபம்/2016
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
12-01-2016.

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்/ திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/ முப்படைத் தளபதிகள்,
பிரதேச செயலாளர்களிற்கு,

**ஓய்வூதியப் பணிக்கொடையிலான அறவீடுகள்**

ஓய்வு பெறும் அரச உத்தியோகத்தர்களிடமிருந்து அரசிடத்தே அறவிடப்பட வேண்டிய அறவீடுகள் (உதாரணம்: அரச உத்தியோகத்தர்களது முற்பண பீ கணக்கின் நிலுவை, நட்டங்கள், மேலதிக சம்பளக் கொடுப்பனவுகள்) குறித்த ஓய்வூதியரின் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அறவிடப்படுகின்றன. இவ் அறவீடுகளை மேற்கொண்டு மாகாண சபை நிறுவனங்களிடத்தே குறித்த அறவீடுகளுக்குரிய காசோலைகளை அனுப்புவதற்கும், மத்திய அரச நிறுவனங்களுக்காக அறவீட்டுத் தொகையுடன் ஏற்புடைய நிதி ஏற்பாடுகளை விடுவிப்பதன் மூலமும் தொடர்புறும் அறவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச் செயற்பாடு 2016 சனவரி மாதம் முதல் கீழ்வரும் வண்ணம் செயற்படுத்தப்படுவதனால் இது பற்றித் தங்களின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் குறித்த உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**02. மத்திய அரசின் நிறுவனங்கள் தொடர்பில்**

ஓய்வு பெற்ற உத்தியோகத்தரிடமிருந்து அரசிடத்தே அறவிடப்பட வேண்டிய அறவீடுகள் தொடர்பில் குறித்த நிதி ஏற்பாடுகளை விடுவிக்கும் கடிதங்கள் இதன் பின்னர் வழங்கப்பட மாட்டாது. அதற்காகக் குறித்த நிதி ஏற்பாட்டினை ஒதுக்கும் அங்கீகாரம், ஓய்வூதியரின் ஓய்வூதியப் பதிவிலக்கத்தினை அறிவிப்பதற்காக வழங்கப்படும் கடிதத்தின் (ஓய்வூதியத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும்) ஊடாகவே ஏற்பாடுகளும் விடுவிக்கப்படும். அவ்வாறு ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுகளின் மூலம் உரிய அறவீடுகளைத் தங்களது மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்களின் ஊடாகத் தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**03. மாகாண சபைகளது நிறுவனங்கள் தொடர்பில்**

மாகாண சபை நிறுவனங்கள் தொடர்பில் அறவீடுகளுடன் தொடர்புறும் காசோலைகளை வழங்குதல் மேற்கொள்ளப்பட மாட்டாது. அதன் படி குறித்த அறவீடுகளை நேரடியாகவே குறித்த நிறுவனங்களது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளில் இடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதன் படி குறித்த நிறுவனத்தின் மாதாந்த வங்கிக் கூற்றினைப் பரீட்சித்துக் குறித்த தொகைகள் வைப்புச் செய்யப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் அறவீடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அறவீடுகளை வைப்புச் செய்வது தொடர்பிலான தகவல்கள் ஓய்வூதியரின் பதிவிலக்கத்தினை அறிவிப்பதற்காக வழங்கப்படும் கடிதத்தில் (ஓய்வூதியத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும்) குறிப்பிடப்படும்.

04. ஓய்வூதியப் பதிவிலக்கத்தினை அறிவிக்கும் கடிதத்தினை கீழ்வரும் வண்ணம் பெற்றுக் கொள்ள முடியும்.

www.pensions.gov.lk → Payment Information →

| | |
|---|---|
| Nic No | |
| Pension No | |

→Submit

(ஒப்பம்)
எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்

1. சனாதிபதி செயலாளர்.
2. பிரதமரின் செயலாளர்.
3. செயலாளர் - பொது நிர்வாக, முகாமைத்துவ அமைச்சு
4. செயலாளர் - நிதி அமைச்சு
5. கணக்காய்வாளர் நாயகம் - தகுந்த நடவடிக்கைகளுக்காக